DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 369/2022 DW : 1

Name : சுமதி Age – 56

W/o. : கேசவன் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date:10.02.2026

<u>பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆக எனது சான்றுதி வாக்குமூலத்தை ஏற்கனவே தாக்கல் செய்கிறேன். இன்று,

1) 16.10.2018 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் (12086/2018) **பி.வா.சா.ஆ.3**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) நான் கஜலட்சுமி மற்றும் ஜெயவேலுவின் 2ம் வது மகள். வனஜா, மோகன், சுமதி, தனலட்சுமி ஆகியோர்கள் என்னுடன் பிறந்தவர்கள். நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதபடிக்க தெரியும். கஜலட்சுமி 3ம் வகுப்பு வரை படித்துள்ளார். ஆனால் அவருக்க தமிழ் நன்கு எழுத படிக்க தெரியும். கஜலட்சுமிக்கு தமிழ் எழுதப்படி தெரியாது என்று சொன்னால் சரியல்ல. கஜலட்சுமி அவருடைய மகள் தீபிகா பெயரில் தாவா சொத்தை செட்டில்மெணட் செய்த விபரம் எனக்கு 2017ம் ஆண்டு தான் தெரியவந்தது. தாவா சொத்து ஆதியில் என் தயார் கஜலட்சுமி பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். கஜலட்சுமி தீபிகா பெயரில் மட்டும் தான் செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் தவறு. வா.சா.ஆ.3 ஆவணத்தில என்னுடைய தாயார் அவருடைய வேறு எந்த பிள்ளைகளுக்கும் அந்த சொத்தில் உரிமை இல்லை என்றாலும், தனலட்சுமி மற்றும் அவரின் மகளுக்கு தான் உரிமை உள்ளது என்று

சொல்லியுள்ளார் என்றால் அது தவறு. நான் 16.10.2018 அன்று தனலட்சுமி அவர் பெயரில உள்ள சொத்துக்களை ஒரு பகுதியை அவரே என் பெயருக்கு செட்டில்மெண்ட் செய்து கொடுத்தார். அதில் என் தாய் கஜலட்சுமியும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். தனலட்சுமி மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று சொன்னால் அது தவறு. முழு சம்மதத்துடன் எழுதிக்கொடுத்தார். நான் தான் அனைவரையும் அழைத்து கொண்டு பொய்யாக என் பெயரில் பத்திரம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

2) தாவா சொத்துக்கள் எவ்வளவு சதுரடி என்று எனக்கு தற்போது ஞாபகமில்லை. தீபிகா பெயரில் செட்டில்மெண்ட் எழுதிவைத்த சமயத்தில் அவருக்கு 19 வயது இருக்கும். என் தாயார் என் பெயரில் எழுதிவைத்த உயிலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு விபத்து ஏற்பட்டதால் எனக்கு ஞாபகமில்லை. தனலட்சுமி என் பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியாதால் அதை பற்றி தீபிகாவிற்கு நான் தெரிவிக்கவில்லை. என் தாயார் சொல்லி தான் அந்த விபரம் எனக்கு தெரியவந்தது.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.02.10 17:48:48 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.